உ

சிவமயம்



உடுவிலைப் பிறப்பிடமாகவும்
மானிப்பாயை வதிவிடமாகவும் அமைந்த

அமரர்:
# திருமதி மருதலிங்கம் கனகமணி

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# நினைவு மலர்

31 - 01 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# அமரர் திருமதி ம. கனகமணி
# அவர்கள்

தோற்றம்: 29 - 4 - 1940

மறைவு: 29 - 12 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரத் திரட்டு

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தால் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே.

## திருவாசகம்

ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வ தொன்றறியேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவம் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்ற தார் பெறு வாருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடு மானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

எதிரிலாத பத்தி தனைமேவி
இனிய தாள் நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனது ளேசிறக்க அருள்வாயே
கதிர் காம வெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க
    மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசுசெய்க குறைவிலா
    துயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க
    நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக
    உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவாசகம்

திருப்பெருந்துறையில் அருளிய

## சிவபுராணம்

கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் (து) ஆனந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின் (று) அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத் (து) ஆண்ட வேந்தனடி வெல்க,
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க.
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி! சிவன்சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங் (கு) ஒளியாய்
எண் இறந் (து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்:
புல் ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருக மாகி பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்(து) இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்(டு) இன்று வீடுற்றேன்!
உய்ய என் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, என ஓங்கி ஆழ்ந் (து) அகன்ற நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமான னாம்விமலா!
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அள வு) இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்றமறை யோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து) அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப் பு) அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்(து) உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்(து) உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மா(சு) அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவு இலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்(து) ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே. உள்ளானே
அன்பருக்(கு) அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்(து) என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூந்த(து) மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர் வார்தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்(று) இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறு வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்(று) என்று
போற்றிப் புகழ்ந்(து) இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீ(டு) இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்(டு) அழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்(று) ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தில். உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

கல்வி, செல்வம், தெய்வ பக்தியால் சிறந்து விளங்கும் சுதுமலை அம்பதியில் அடியார்களை ஆட்கொள்ளும் நிமித்தம் சர்வேஸ்வரியாய், சர்வஜோதியாய் சர்வபூரணியாய், சர்வரட்சகியாய் எங்கும் நிறைந்து விளங்கும் சுதுமலை அம்மன் ஆலயத்துக்கு வடக்கே அமைந்துள்ளது உடுவில் கிராமம் இக்கிராமத்தில் சகல சுகபோகங்களுடனும் வாழ்ந்த சின்னத்தம்பிக்கும், சின்னம்மாவுக்கும் இரண்டாவது புத்திரியாய் பிறந்தார் கனகமணி

உரிய காலம் வந்ததும் மானிப்பாயைச் சேர்ந்த வர்த்தகர் மருதலிங்கத்தைத் திருமணம் செய்து இல்லறமென்னும் நல்லறத்தை இனிதே நடத்தி வந்தார். இவர்கள் தம் இனிய வாழ்க்கையின் போது இவர்களுக்கு நான்கு பெண்பிள்ளைகளும் ஓர் ஆண் மகனும் பிறந்தார்கள்.

அமரர் கனகமணி அவர்கள் கணவனுடன் இணைந்து நல்லறம் செய்து வாழ்ந்ததோடு தனது பிள்ளைகள் கல்வி அறிவு பெற்று சிறந்த ஒழுக்கத்துடன் வாழ வழி காட்டியாக இருந்தார்

அயலிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனருள் வேண்டித் தொழுதுவரும் நாளில் தனது 57 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவன் இரங்கல்

என்னோடு என்றும் இணைந்து இனிய வாழ்க்கை வாழ்ந்து குடும்பமான வளையைத் தாங்கிய தூணாக நின்ற என் துணைவியாரே எடுத்த கருமங்களை இனிதே திறம்பட முடிக்க என்றும் உற்ற துணைவியாக இருந்தீர்கள்

இன்றோ என்னையும் அருமைப் பிள்ளைகளையும் விட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்களே

என்னையும் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு ஏன் மரணத்தைத் தழுவிக் கொண்டீர்கள் இனி உங்களை எப்பிறப்பில் காண்பேனோ? என்றும் என் வீட்டில் என்னுடன் இணைந்திருப்பதாகவே நான் நினைத்து வாழ்கிறேன். உங்கள் ஆன்மா சாந்தியடைய மருதடி விநாயகனைப் பிரார்த்திக்கின்றேன்.

## பிள்ளைகள் இரங்கல்

அன்புடன் அமுதூட்டி, ஆரத் தழுவிய எங்கள் அம்மாவே எம்மை கல்வி கற்று இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி வகுத்துத் தந்த எங்கள் தேடக்கிடைக்காத செல்வமே எங்களை ரஞ்சினி, பிருதுவியா, சாந்தினி, தயாளன், ரேவதி, என அன்புடன் அழைத்த குரல் இன்று ஓய்ந்ததுவோ இன்று நாம் கடல் கடந்து அன்னிய தேசத்தில் வாழ்ந்து வருகின்றோம். உங்கள் இறுதி யாத்திரையைக் கூட, எங்கள் அருமை அம்மா, எங்களால் காண முடியவில்லையே எனக் கலங்கி நிற்கிறோம்

இன்று நாங்கள் பலரும் பாராட்ட வாழ்கிறோம் என்றால் நீங்கள் எம்மில் அல்லும் பகலும் காட்டிய பாசமும் நேசமும் தான் காரணம் இதை நாம் இறுதி வரை மறக்க மாட்டோம். இது சத்தியம் எங்கள் தாயே.

இனி எப்பிறப்பில் காண்போம் உங்கள் அருமை முகத்தை

எம்மை இனி ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் இரங்கல்

எங்கள் அருமை மாமி எங்களை நீங்கள் தாய் போல் ஆதரித்து அன்பு காட்டினீர்கள் நாங்கள் வெளிநாட்டிலிருந்து வந்து உங்களைப் பார்க்கு முன் நீங்கள் எங்களைப் பார்க்க முடியாத பரமனின் ஊருக்குப் போய் விட்டீர்கள். பிறப்புக்கு அடுத்ததாக இறப்பு நிச்சயம் என்பதை நாம் உணர்வோம் ஆனால் நீங்கள் பாதிவயதில் எங்களை விட்டு பரமனடி சேர்ந்து விட்டீர்கள்.

தாங்கள் மறைந்த செய்தி அறிந்து மனங்கலங்கி நிலை குலைந்து நிற்கின்றோம். எங்களை நீங்கள் அறத்துடனும் அன்புடனும் வாழ ஆசீர் வதியுங்கள். உங்கள் நல்ல ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கிறோம்.

தங்கள் பிரிய மருமக்கள்
சண்முகநாதன், கமலகுமாரன்
செல்வரத்தினம், இரஜனி

## பேரப்பிள்ளைகள் இரங்கல்

எங்கள் பாட்டி அருமைப் பாட்டி நீங்கள் எங்களை விட்டு எங்கு சென்றீர்கள் எங்களை அன்புடன் அரவணைத்தீர்கள் எங்கள் பாட்டியின் திருமுகத்தை எங்களால் பார்க்க முடியவில்லை பழக முடியவில்லைகடித மூலமே தங்களைப் பார்த்து வந்தோம் இனிஉங்கள் முகத்தை எப்போதும் காண்போமோ என்று எண்ணிக்கலங்குகின்றோம். பாட்டி, ஏன்பாட்டி எங்களை விட்டு இவ்வளவு விரைவில் போனீர்கள்? சொல்ல மாட்டீர்களா?

மீனா ராசா- ஐங்கேசன்-
கபீசன்- துளசி- தயாளினி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணன் இரங்கல்

எங்கள் குடும்பத்தின் உடன் பிறப்பே. நாம்பாசமலர்களாக மலர்ந்தோம் நகமும் தசையுமாக, வீணையும் இசையுமாக, வானமும் பூமியுமாக, இருவரும் ஒன்றாக வளர்ந்தோம் கல்வி கற்றோம் எங்கள் குடும்பம் சிறக்க வாழ்ந்தோம.

எனக்கொரு தங்கை இருக்கிறாள் என்ற எண்ணத்தில் வாழ்ந்த எனக்கு; மின்னாமல் முழங்காமல் என்னை விட்டுப் போன துயர் துடைக்க இனியார் வருவார்?

தங்கள் அன்பான ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவால் வருந்தும் எமக்கு ஆறுதல் கூறி அன்பு காட்டிய அனைவருக்கும் முதற்கண் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் இறுதிக் கிரிகைகளில் பங்கு கொண்டோர் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் சிறப்பாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகஸ்த்தார்களுக்கும், 31- 1- 98 ல் நடைபெறுகின்ற வீட்டுக் கிருத்திய வைபவத்தில் கலந்து கொண்டவர்க்கும் இந்த நினைவு மலரை அச்சிட உதவிய அச்சகத்தாருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் நன்றி வணக்கம்.

துணைவர் சி. மருதலிங்கம்
பிள்ளைகள் மருமக்கள்

திருப்பதி
மானிப்பாய்
31 1 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவரின் வம்சாவழி

சின்னத்தம்பி + சின்னம்மா

- கனகமணி + மருதலிங்கம்
  - இரஞ்சினி + சண்முகநாதன்
    - மீனா
    - சாரா
  - பிருதிவியு + கமலகுமாரன்
    - ஐங்கீரன்
    - கபீசன்
  - சாந்தினி + செல்வரத்தினம்
    - துளசி
  - தயாளன் + இரஜனி
    - தயாளினி
  - ரேவதி
- சாம்பசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச் செல்வி அச்சகம்
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org